# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
## FIRST YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2006 / 2007
## HELD IN MAY - 2007

## TML 1.11– LITERARY APPRECIATION AND PRESCRIBED TEXTS

(அ) பகுதியில் உள்ள **இரு** வினாக்களுக்கும் (ஆ), (இ) பகுதிகளில் **ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு** வினாவையேனும் தெரிந்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி - அ

01. இலக்கியம் என்றால் என்ன? அதன் சிறப்பம்சங்கள் யாவை? அது ஏனைய துறைகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? விரிவாக கருத்துரைக்க.

02. (அ) மேல்வரும் மூன்று செய்யுள்களையும் அவற்றின் பொருள் புலப்படும் வகையில் இக்கால உரைநடையில் எழுதுக.

(i)
கலங்கா வுள்ளங் கலங்கக் கடைசிவந்து
விலங்கிநிமிர் நெடுங்கண் புலம்புமுத் துறைப்ப
அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை
ஆம்ப னாறுந் தேம்பொதி நறுவிரைத்
தாமரைச் செவ்வாய்த் தண்ணறற் கூந்தற்
பாணவாய் வண்டு நோதிறம் பாடக்
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்பப்
புள்வாய் முரசமொடு பொறிமயிர் வாரணத்து
முள்வாய்ச் சங்க முறைமுறை யார்ப்ப
உரவுநீர்ப் பரப்பி னூர் துயி லெடுப்பி
இரவுத் தலைப்பெயரும் வைகறை காறும்
அரையிருள் யாமத்தும் பகலுந் துஞ்சார்

(ii)
கார் எனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
வார் சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார் மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற்பரவை புக்கான்
வார் மணிப் புனலால் மண்ணை மண்ணுநீர் ஆட்டும் கண்ணான்

(iii)
இயன்றது என் பொருட்டினால் இவ் இடர் உனக்கு என்ற போழ்தும்
அயின்றனை கிழங்கும் காயும் அமுது என அரிய புல்லில்
துயின்றனை எனவும் ஆவி துறந்திலென் சுடரும் காசு
குயின்று உயர் மகுடம் சூடும் செல்வமும் கொள்வென்யானே.

(ஆ) மேல்வரும் கவிதையில் நீர் காணும் நயத்தினைச் சுருக்கமாக விபரிக்குக.

**நீருழவன்**

ஓட்டைக் குடிசை ஒழுக விழித்திரவில்
நாட்டைக் கடந்தான். நடுக்கடலில்
போட்ட
வலையை வலித்திழுத்தான்
வந்ததோ பாசி!

குலையாத நெஞ்சைக் கொடுத்தே
அலையோடு
முட்டி அதன் மேன் முகட்டில் மிதந்து விழும்
மொட்டைப் படகை முடுக்கினான்

வெட்டவெளி
நீரை உழுதான்.
நெடுநாட் பழக்கம் இது.
பாரை சுறா என்று பார்த்திருக்கும்
ஊரை
மகிழ்விக்க வல்ல மனிதன், வயிற்றை
அகழும் பசியால் அயரான்

பகல்முற்ற
முன்னர் தன் வற்றா முயற்சிக்கிவை ஈடே
என்னும் படி நிறைந்த எவ்வளவோ
மின்னுகிற
மீனின் சுமை யோடு மீள்கின்றான்.

பேருழைப்பு
ஈனும் மகிழ்ச்சிக் கெதிரேது?
மானிடன்
தொட்டால் துலங்காத் தொழில் உண்டோ?

வீட்டவள்
பட்டே புனைந்து பளிச்சென்று
மொட்டுவாய்
ஏன் சிரிக்க மாட்டாள் இனிமேல்?
எழிற்சிறுமி
தேன் தமிழைக் கற்றுவரச் செல்லாளோ
ஏனையவர்
பிள்ளைகள் போலப் பெரும் பள்ளியை நோக்கி
வெள்ளை உடுத்த மிடுக்குடனே?

உள்ளபடி
வந்தோர் பிறன் அவற்றை
வாரி அள்ளிக் கொள்கின்றான்
எந்த நியதிக்கிது ஏற்கும்.....?

சந்தையிலே
விற்றுப் பயனடைவோன் வேற்றாள்!
விளைவேதும்
அற்றுப்போய் மாய்வான் அரும்வலைஞன்

முற்றியுள்ள
பொல்லாக் கடனால் பொருந்தா வகையில் தன்
செல்வம் தனைக்களவு செல்லவிட்டு
மெல்ல
நடக்கின்றான் வீட்டுக்கு,
நாளும் உளத்தை
ஒடிக்கின்ற ஏமாற்றத் தோடு

## பகுதி - ஆ

03. குகனின் தோற்றப் பொலிவு, குணாதிசயம் முதலானவற்றின் சிறப்புக்களை கம்பன் சித்திரிக்குமாற்றை 'குகப்படல'த்தினை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

04. "சீறாப்புராணத்தின் 'நபிப்பட்டம் பெற்ற படலம்' உமறுப் புலவரின் கவியாற்றலை வெளிப்படுத்துகின்றது." இக்கூற்றுக் குறித்து கருத்துரைக்குக.

## பகுதி - இ

05. "பாரதியின் கவிதைகள் தமிழ்க் கவிதையில் நம்மை அதிகம் ஈடுபடச் செய்கின்றன." இக்கூற்றினை பாரதியின் கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு அலசுக.

06. கவிஞர் புரட்சிக் கமாலின் கவிதைகளை விமர்சன ரீதியாக மதிப்பிடுக.

07. "புதுமைப்பித்தனின் கதைகள் வாசிக்க வாசிக்க ஆர்வம் தருபவை" - இக்கூற்றினை அவரது சிறுகதைப் பொருள், நடை முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு அலசுக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றி விரிவான குறிப்பு எழுதுக.

(i) புதுக்கவிதையும் பிச்சமூர்த்தியும்

(ii) அப்துல் காதர் லெப்பையின் கவிதைகளில் சமூக சித்திரிப்பு

(iii) மகாகவியின் கவிதைகளில் அழகியல்

(iv) தோப்பில் முஹம்மது மீரானின் கதைக்களம்

***